


# “சமூக மாற்றத்தின் மூலம் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தியவர் கலைஞர்”

**கழக இளைஞர் அணி நடத்திய 'தி.மு.க. 75 அறிவுத் திருவிழா' நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக நடைபெற்ற 'இருவண்ணக் கொடிக்கு வயது 75' கருத்தரங்கத்தின் ஐந்தாவது அமர்வில், 'திராவிடம் தந்த நலத்திட்டங்களும் நலவாழ்வும்' என்ற தலைப்பில் மாநில திட்டக்குழு செயல் துணைத்தலைவர் பேராசிரியர் ஜெயரஞ்சன் அவர்கள் ஆற்றிய உரை :**



பேராசிரியர் ஜெயரஞ்சன்
மாநில திட்டக்குழு
செயல் துணைத்தலைவர்

“30 வருடங்களுக்கு முன்பு வரை தமிழ்நாட்டின் பொருளாதாரமும் சமூகமும் மிகப் பெரிய அளவில் வேளாண்மை சார்ந்துதான் இருந்தது. வேளாண்மையைச் சார்ந்திருக்கும்போது கிராம அளவில் அதிகாரம், யார் அதிகம் நிலம் வைத்திருந்தார்களோ, அவர்களிடம்தான் இருந்தது. தமிழ்நாடு இன்றைக்கு இவ்வளவு விரைவான வளர்ச்சி அடைந்துகொண்டிருக்கிறது, இவ்வளவு பெரிய மாற்றங்களைச் சந்தித்துக்கொண்டிருக்கிறது என்றால், அதற்கு கலைஞர் செய்த மிகப் பெரிய பணி, அந்தக் கிராமப்புற அதிகாரத்தைக் காலி செய்ததுதான். ஒரே நாளில் அதை அவர் செய்ய வில்லை. கொஞ்சம் கொஞ்சமாகச் செய்தார்.

கிராமப்புறங்களில் அதிக அளவு நிலம், நிலச்சுவான்தார்களிடமும் மடாதிபதிகளிடமும்தான் இருக்கும். அந்த நிலங்கள் எல்லாம் குத்தகை





தாரர்களிடம்தான் இருக்கும். அந்தக் குத்தகைதாரர் களைக் கட்டுப்படுத்துவதன் மூலம்தான், அவர்கள் கிராமத்தையே கட்டுப்படுத்திக்கொண்டு இருந் தார்கள். அவர்களின் அதிகாரத்தை ஒழிப்பதற்கு கலைஞர் அதிகாரமிக்க சில சட்டங்களை இயற்றி னார். அதற்கு முன்பே நில உச்சவரம்புச் சட்டம் இருந்தாலும், அதன் உச்சவரம்பைக் குறைத்து நிலப்பிரபுத்துவ அதிகாரத்தைக் குறைத்தார். யார் நிலத்தை உழுகிறார்களோ அவர்களுக்கு அதிகம் அதிகாரம் கிடைக்கும்படி செய்தார்.

## ரேஷன் கடைகள் உருவாக்கம்

பிறகு, பொது விநியோகத் திட்டத்தின் மூலம் ரேஷன் கடைகளை உருவாக்கினார். ரேஷன் கடைகள் மூலம் அரிசியை கிலோ 2 ரூபாய்க்குக் கொடுத்தார். நிலத்துக்காகவும் அரிசிக்காகவும்தான் கிராமப்புற மக்கள் பண்ணையார்களைச் சார்ந்திருக்க வேண்டியிருந்தது. அதனால், கலைஞர் நிலவுடைமை அதிகாரத்தைக் குறைத்ததுடன், மலிவுவிலை அரிசி மூலம் உணவுக்காகப் பண்ணையாரைச் சார்ந்திருக்க வேண்டிய நிலையையும் மாற்றினார்.

அதேபோல் கிராம நிர்வாகத்தை பரம்பரை பரம்பரையாக ஒரு குடும்பமே மேற்கொள்ளும் முறை இருந்தது. இதை மாற்றுவதற்காக 1974–ஆம் ஆண்டில், முன்னாள் ஐ.ஏ.எஸ். அதிகாரி திரவியம் என்பவர் தலைமையில், ஓர் ஆணையத்தை அமைத்தார் கலைஞர். 'இந்தப் பணி பரம்பரையாக இருக்க வேண்டிய அவசியம் இல்லை. இதை அரசுப் பணியாக மாற்றலாம். அரசுப் பணியாக மாற்றி, தமிழ்நாட்டில் இருந்து யார் வேண்டுமானாலும் தேர்வு எழுதலாம். தேர்வை நடத்தி, இட ஒதுக் கீட்டை அளிக்கலாம்' என்று அந்த கமிட்டி பரிந்துரைத்தது. இப்படி இட ஒதுக்கீட்டின் மூலம் ஒருவர் கிராம நிர்வாக அலுவலராக வரும்போது, அந்தக் கிராமத்தை நிர்வாகம் செய்ததில் சாதிய அதிகாரம் ஒழிந்தது.

## அதிகாரம் ஒழிப்பு

இப்படி ஒவ்வோர் அதிகாரமாக ஒழித்து, கிராமப்புறத்தில் இருந்த ஏழை, எளிய மக்கள், ஒடுக்கப்பட்ட மக்களை அதிகாரத்தின் பிடியில் இருந்து கலைஞர் விடுவித்தார். பிறகு, அவர்கள் வாழ்க்கை மாற்றத்துக்கு நல்ல சாலைகள், நகரங்களுடன் இணைக்கும் பேருந்துகள், கல்வி வளர்ச்சிக்கான திட்டங்களை அடுத்தடுத்து கொண்டுவந்தார். இதன்மூலம் கிராமப்புற மக்கள் வெறுமனே வேளாண்மையை மட்டுமே நம்பியிருந்த நிலையை மாற்றினார்.

அதற்காக யாரும் விவசாயமே செய்யவில்லை என்று அர்த்தமில்லை. வேளாண்மை இருக்கிறது. அனைத்து வயல்களிலும் பயிரிட்டுக்கொண்டுதான் இருக்கிறார்கள். ஆனால், அதை மட்டுமே நம்பி தொழில் என்று பார்ப்பது வெறும் ஐந்து விழுக்காடு மக்கள்தான். மீதி இருப்பவர்கள் வேளாண்மை அல்லாத வேறு தொழில்களைப் பார்க்கிறார்கள்.

இன்றைக்கு இந்தியாவிலேயே மிகப் பெரிய அளவில் கிராமப்புறங்களில் வேளாண்மை அல்லாத வேலை வாய்ப்புகள் தமிழ்நாட்டில்தான் அதிகம். அந்தமாதிரி மாறியதால்தான் ஆந்திராவில் விவசாயிகள் தற்கொலை, கர்நாடகாவில் தற்கொலை, மகாராஷ்டிராவில் தற்கொலை என்றெல்லாம் நடந்ததைப் போல் தமிழ்நாட்டில் நடக்கவில்லை. காரணம், இங்கு விவசாயம் கைகொடுக்காவிட்டாலும் மக்களால் பிழைத்துக்கொள்ள முடியும். வேளாண்மையை மட்டும் நம்பியிருந்தால், நாம் பல துயரங்களைச் சந்தித்திருப்போம். படித்த இளைஞர்கள் பல்வேறு துறைகளுக்குச் சென்றுவிட்டார்கள்.

## சமூக நிலைமை மாற்றம்

இந்தியாவில் மிக வேகமாக வளரக்கூடிய பொருளாதாரமாகத் தமிழ்நாடு திகழ்ந்து கொண்டிருக்கிறது. இதுபோன்ற ஒரு மாற்றம் வட இந்தியாவிலும் வரவில்லை, கிழக்கு இந்தியா விலும் வரவில்லை. நமக்குத் தரவேண்டிய நிதியைப் பறித்து, ஒன்றிய அரசு பீகாருக்கோ உத்தரப்பிரதேசத்துக்கோ செலவு செய்தாலும்கூட, தமிழ்நாட்டில் நடந்த பொருளாதார மாற்றம், அங்கு நடக்காது. காரணம், இது வெறுமனே பொருளாதார வளர்ச்சி மட்டுமல்ல, கிராமப்புறத்தில் இருந்த சமூக நிலைமையையே கலைஞர் மாற்றினார். இந்த மாற்றங்கள் பீகாரிலோ உத்தரப்பிரதேசத்திலோ நடக்கவில்லை. எனவே, சமூக அமைப்பை மாற்றாமல் என்னதான் நிதியைக் கொண்டு போய்க் கொட்டினாலும் பொருளாதார வளர்ச்சி ஏற்படாது.

அடுத்த 20 ஆண்டுகளில் நமது பொருளாதாரம் என்ன மாதிரியான பொருளாதாரமாக இருக்கும் என்றால், வளர்ந்த நாடுகளின் பொருளாதாரம் என்னவாக இருக்கிறதோ அந்த அளவுக்கு இருக்கும்.

இத்தனைக்கும் ஒன்றிய அரசு நமக்கு நியாயமாகத் தரவேண்டிய நிதியைத் தருவதில்லை. நாம் ஒரு ரூபாய் வரியாகக் கொடுத்தால் 29 பைசாதான் திருப்பித் தருகிறது. நம் கையை, காலைக் கட்டிவைத்து ஓடச் சொல்கிறார்கள். அப்படியிருந்தும் பொருளாதாரத்தில் இந்தியா ஆறு விழுக்காட்டில் வளரும்போது, தமிழ்நாடு 11 விழுக்காட்டில் வளர்ந்துகொண்டிருக்கிறது.

காரணம் என்னவென்றால், கலைஞர் சமுதாயத்தில் ஏற்படுத்தி வைத்திருக்கக்கூடிய மாற்றம். அதன் வழியாகப் பொருளாதாரத்தில் நிகழ்ந்துகொண்டிருக்கிற மாற்றம். இந்த மாற்றத்தை யாராலும் நிறுத்தவே முடியாது. ஏனென்றால், தமிழ்நாட்டை நாம் அப்படியான நிலையில் கொண்டுபோய் நிறுத்திவிட்டோம். பிறகு, மக்கள் பார்த்துக்கொள்வார்கள். எல்லோரையும் படிக்க வைத்து, பள்ளி ஆசிரியர் வரைக்கும் கொண்டு வந்தால் போதும். அவர்கள் ஆசிரியர்கள் ஆனதும், மகனை இன்ஜினீயரிங் படிக்க வைப்பார்கள்; பெண்ணை டாக்டருக்குப் படிக்க வைப்பார்கள். அடுத்து, தங்கள் மகனையும் மகளையும் வெளிநாட்டில் படிக்கவைக்கும் அளவுக்குச் செல்வார்கள்.

முதலமைச்சருடன் ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக் கழக நிகழ்ச்சிக்காக, நான் இங்கிலாந்து சென்றிருந்தபோது, நூற்றுக்கணக்கான பேர் முதலமைச்சரைப் பார்க்க வந்திருந்தார்கள். 'சமூக நீதி இயக்கத்தினால், சமுதாயத்தின் பல பகுதிகளில் இருந்து நாங்களெல்லாம் இங்கு வந்து, படித்து நல்ல வேலையில் இருக்கிறோம். எங்கள் பிள்ளைகள் இங்கிலாந்தில் இருக்கக்கூடிய மிகச் சிறந்த பள்ளிகளில் படித்துக்கொண்டிருக் கிறார்கள். நீங்கள் இன்னும் ஐந்து வருடங்கள் கழித்து இங்கிலாந்துக்கு வரும்போது, இதே ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக்கழகத்திலோ கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்திலோ எங்கள் குழந்தைகள் படித்து, மிக உயர்ந்த கல்வியைப் பெற்றுக் கொண்டிருப்பார்கள். அத்தகைய மாற்றத்தை ஏற்படுத்திக் காட்டியது, திராவிட இயக்கம்' என்றார்கள்.

## மகத்தான கனவு கண்ட தி.மு.க.

இந்தத் திட்டங்களுக்கு எல்லாம் அடிப்படை காரணமாக இருந்தது, கலைஞரின் பார்வை. நம் கனவு என்பது சுதந்திரம், சமத்துவம், நவீனத்துவம். நம்முடைய ஐம்பெரும் முழக்கங்களை எடுத்துப் பார்த்தீர்கள் என்றால் இந்த மூன்று விஷயங்களும் வரும். இப்படி ஒரு மகத்தான கனவைக் கொண்ட ஒரே இயக்கம் தி.மு.க.தான்.

அரசியல் அமைப்புச் சட்டத்தைச் சமர்ப்பித்த பிறகு, அண்ணல் அம்பேத்கர் 'இந்தியாவில் எல்லோருக்கும் வாக்களிக்கும் உரிமையைக் கொடுத்திருக்கிறோம். அதன்மூலம் அரசியல் ஜனநாயகத்தைக் கொண்டுவந்துவிட்டோம். ஆனால், இந்தியாவில் சமூக ஜனநாயகமும் பொருளாதார ஜனநாயகமும் கிடையாது. எப்போது இந்தியாவில் சமூக ஜனநாயகமும் பொருளாதார ஜனநாயகமும் வருகிறதோ, அப்போதுதான் அரசியல் ஜனநாயகம் அர்த்தப்படும்' என்றார். அம்பேத்கரின் அந்த வார்த்தைகளுக்குச் செயல் வடிவம் கொடுத்து நிறைவேற்றிக் காட்டிய ஒரே இயக்கம், திராவிட முன்னேற்றக் கழகம்தான். அதன் அச்சாணியாக இருந்தது, டாக்டர் கலைஞர் அவர்கள்தான்.

நாம் இப்போது நடைபோடும் பாதை அவர் போட்ட பாதைதான். அதில்தான் நாம் தொடர்ந்து பயணித்துக்கொண்டிருக்கிறோம். அவர் எதையெல்லாம் செய்தாரோ அதன் தொடர்ச்சியாகத் தான் 'தமிழ்ப்புதல்வன்', 'புதுமைப்பெண்', 'காலை உணவுத்திட்டம்' என்று திட்டங்களைத் தொடர்ந்து கொண்டிருக்கிறோம், இனியும் தொடர்வோம்!”

---

## அனைவரும் போற்றும் அறிவுத் திருவிழா!

**சுல்தான் இப்ராஹிம் என்பவரின் முகநூல் பதிவு :**

'காலத்தின் நிறம் கருப்பு சிவப்பு' என்ற வரலாற்று ஆவணத்தில்... மொத்தம் 112 கட்டுரைகள்.

இதில், ஒவ்வொரு பிரிவிலும் முதலாவதாக வாசிக்க வேண்டும் என்று நான் குறித்து வைத்திருக்கும் கட்டுரைகள்.

அரசியல் பிரிவில் அண்ணன் திரு.கோவி லெனின் அவர்கள் எழுதி இருக்கும் 'சவால்களைச் சந்தித்த எதிர்ப்பின் இயக்கம்', சமூகம் என்னும் பிரிவில் சகோதரி யாழினி எழுதி இருக்கும் 'திராவிட இயக்கத் தழலேந்திய மகளிர் தொடர் போராட்டம்', பண்பாடு என்னும் பிரிவில் ஐயா செந்தலை கவுதமன் எழுதி இருக்கும் 'ஆட்சியிலும் அன்றாட வாழ்விலும் தி.மு.க. பாய்ச்சிய தமிழ் வெளிச்சம்', பொருளாதாரம் என்னும் பிரிவில் அண்ணன் திரு. சூர்யா கிருஷ்ணமூர்த்தி எழுதி இருக்கும் 'திராவிடப் பொருளாதாரத்தின் தனித்துவம்', தோழமைக் குரல்கள் என்னும் பிரிவில் திரு. பரூக் அப்துல்லா எழுதி இருக்கும் 'மதச்சார்பின்மை, நீதி, கூட்டாட்சி ஒற்றுமைக்காக இணைந்த பயணம்', கழகக் குரல்கள் என்னும் பிரிவில் கழகத்தின் துணைப் பொதுச் செயலாளர். மாண்புமிகு அமைச்சர், எங்கள் அரசியலின் அடையாளம் ஐயா ஐ.பெரியசாமி அவர்கள் எழுதி இருக்கும் 'தளபதியின் அந்த அசாத்திய துணிச்சல் வியப்புதான்' ஆகிய கட்டுரைகள்.

வாசிப்புக் கலைதான் திராவிட இயக்க அரசியலை வளர்த்தது...

வாசிப்பை நேசிப்போம்!'